தமிழ் மொழிக் காஞ்சி

ஸ்ரீமத் சிவத்தியானாநந்த மஹர்ஷி பாடியது

தாக்ஷிணாத்ய கலாநிதி மஹாமஹோபாத்தியாய
டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யரின் விதேஹ முக்தி நிலை

கடா

தமிழ்ப்பாவை தோள் ஒடியச் சங்கநூல் தேம்பத்
தமிழ்ப்பா மணமற்றே சாம்பத் - தமிழ்ப்பாவோர்
சாமிநா தாவென்றே தாங்கா தலறிவிழப்
பூமியை ஏன் விட்டாய் புகல்.

விடை

1. “உள்ளகாலை உலகத் தமுதத்தை
ஊட்டும் நூலை உமக்களித் தோங்கினேன்;
கொள்ளை கொள்ளுறு கம்பலை கண்ணீரும்
கூடும் ஆற்றினை ஊட்டினேன் உங்களுக்(கு);
எள்ளும் மெய்யினை விட்டபின் என்னுடை
இன்பம் இஃதென எல்லவர் கண்ணிலும்
கொள்ளும் மோனநிலை இது பாருமின்
கூர்ந்(து)” என, எமக்குண்மை தெரித்தனன்.

2. விண்டுவின் அப் பரம பதத்தினை
வேம்புவையன் மகன் சாமிநாதனும்
அண்ட யோனியினூடே நுழைந்து, பின்
ஆயிரவர் அமரர் கை கூப்புறக்
கண்டு சென்றனன்; காமர் அமுதத்தைக்
கையிலேந்தி அரமகளிர் தர,
உண்டு தானொரு சோமபானீயனாய்
உன்னதத் தலம் உற்றனன்; பின்னரும்,

3. தத்துவங்கள் தழன்றபின் தூலமெய்
தாண்டி ஒத்துறு **சூக்குமத்** தெய்தியே
மெத்திய குணப் பண்பினை மெய்எனல்
மேன்மை அன்றென் றவற்றை விடுத்துப் பின்
ஒத்த **காரண** மெய்யினி னோங்கியே
ஒன்றலாத கருவி யொழித்துத் தன்

நித்தமான **இறை நிலை** எய்தியே
நித்தன் நான் என நிர்த்தனம் செய்தனன்.

4. ஸகுண உண்மை உணர்ந்(து) அதுகூடப் பொய்
சார்ந்து நிற்பதைக் கண்டு, குணமிலா
விகுணம் சார்நிலை மேவி, விளையாட்டா
வெம்மை தண்மைக ளாய துவந்தங்கள்
அகலச் சாந்த உருவ அருவத்தை
அண்டி எய்தி உண்(டு) இல்லையெனும் ஒரு
*பகுதி யற்ற நிலை கவ்வப் பாரினீர்,
பார்மினோ இது †பண்புநீங்(கு) இன்(பு) என்றான்.

[* ப்ரகிருதி. † நிரதிசயாநந்தம்.]

5. பதவுலகம் அழியும் எனும் அதைப்
பண்பின் ஊட்டி அழியாப் பதத்தினை
நிதழு மெய்துறு நிட்டையை ஆருறும்
நிண்ணயத்தைத் தெளிவித்த ஜீவனைத்
ததையும் முக்த ஆன்மா எனச்செப்புதல்
சாலப் தாகும்; மரணத்தை எய்தினான்
அதமுற எனல் ஆன் நிலையே அன்றி
ஆரியப் பதி ஆனநிலை அன்றே.

6. ஆயிரம் பிறை கண்டு தொழுதவன்
ஆயிரம் இதழ் பாயும் அமுதத்தை
ஆயிரக் கணக்கான வகையினின்
ஆயிரத்த்க்கு மேலாம் தடவைகள்
பாயிரம் சொலிப் பண்பிற் பருகிய
பான்மை வாய்ந்த பரன் **சாமிநாதனை**
ஆயிரம் தரம் தேவன் எனக்கூறி
ஆநந்தங்கள் கொண்(டு) ஆடி மகிழுவோம்.